டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.11.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 118 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டிற்கு 4 விருதுகள்

## குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு வழங்குவார்

புது தில்லி, நவ.11

புதுதில்லியில் உள்ள ஷ்ரம் சக்தி பவனில் மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் சி ஆர் பாட்டீல், 6-வது தேசிய நீர் விருதுகள் பெறுவோரின் பட்டியலை வெளியிட்டார். 2024-ம் ஆண்டுக்கான இந்த விருதுகள், சிறந்த மாநிலம், சிறந்த மாவட்டம், சிறந்த ஊராட்சி, சிறந்த உள்ளாட்சி அமைப்பு, சிறந்த பள்ளி அல்லது கல்லூரி, சிறந்த தொழிற்சாலை, சிறந்த நீர்நிலைப் பயன் பாட்டாளர் சங்கம், சிறந்த நிறுவனம் (பள்ளி அல்லது கல்லூரி அல்லாத), சிறந்த சிவில் சமூகம், சிறந்த தனிநபர் என பத்து வகைகளில் வழங்கப்படுகின்றன.

விருதுகள் பற்றிய அறிவிப்பு வெளியிடும் நிகழ்ச்சியில், மத்திய ஜல்சக்தித்துறை இணையமைச்சர் ராஜ்பூஷன் சவுத்ரி, நீர்வளத் துறை செயலாளர் வி எல் காந்தாராவ், குடிநீர் மற்றும் துப்புரவுத் துறைச் செயலாளர் அசோக் கே கே மீனா மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

சிறந்த மாநிலம் என்ற வகையில், மகாராஷ்டிரா முதல் பரிசையும், குஜராத் இரண்டாம் பரிசையும், அரியானா மூன்றாம் பரிசையும் பெறுகின்றன.

சிறந்த மாவட்டங்கள் பிரிவில் தமிழ்நாட்டின் திருநெல் வேலியும், சிறந்த கிராமங்கள் பிரிவில் திருவள்ளூர் மாவட்டம், பாலாபுரமும், சிறந்த நீர் பயன்பாட்டாளர் சங்கம் பிரிவில், கோயம்புத்தூரில் உள்ள வேட்டைக்காரன்புதூர் ஓடையகுளம் கிராமமும், சிறந்த தொழிற்சாலைப் பிரிவில் காஞ்சிபுரத்தில் உள்ள அப்போலோ டயர்ஸ் நிறுவனமும் விருது பெறுகின்றன.

விருது பெறும் ஒவ்வொருவருக்கும் பாராட்டுப் பத்திரமும், கோப்பையும் குறிப்பிட்ட வகைமைக்கு ஏற்ப ரொக்கப்பரிசும் வழங்கப்படும்.

விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, புதுதில்லி விஞ்ஞான் பவனில் 18.11.2025 அன்று நடைபெறும். இந்த நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தலைமை விருந்தினராக பங்கேற்று விருதுகளை வழங்குவார்.

# திருந்திய நெல் சாகுபடிக்கான மாநில அளவிலான விருது

சேலம், நவ.11

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாரத்தில் தற்சமயம் சம்பா நெல் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நமது தமிழ்நாடு அரசு சார்பில் நாரயணசாமிநாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிர் விளைச்சல் போட்டியில் போட்டியிடும் விவசாயி குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். மேலும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடி செய்த முன்னோடி விவசாயியாக இருக்க வேண்டும்.

மேலும் நில உரிமைதாரர்கள் மற்றும் குத்தகைதாராா்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். அரசால் அங்கீகரிக்கப் பட்ட நெல் இரகங்களை மட்டுமே பயிர் செய்திட வேண்டும். இப்பயிர்விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள விவசாயி ரூ.150/- ஐ பதிவுக் கட்டணமாக செலுத்திட சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கேட்டுக் கொள்கிறார்.



# நவம்பர் 15க்குள் விவசாய அடையாள எண் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை

இராமநாதபுரம், நவ.11

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் கூறியதாவது, மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டார விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே நவம்பர் 15க்குள் விவசாயிகள் நில விவரங்களை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பின்னர் விவசாயி களுக்கு தனித்துவமான அடையாள எண் வழங்கப்படும். வரும் காலங்களில் மத்திய மாநில அரசின் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த அனைத்து துறை மானியங்களும் இந்த அடையாள எண்ணின் அடிப்படையிலேயே வழங்கப்படும். பி.எம் கிசான் தொகை பெறுவதற்கும் இந்த அடையாள எண் பெறுவது அவசியமாகிறது. மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களில் விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கு வதற்காக விவசாயிகளிடமிருந்து விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அடையாள எண் பெறாத விவசாயிகள் தங்கள் ஆதார் நகல், நில ஆவண நகல், ஆதாருடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் ஆகியவற்றுடன் பொது சேவை மையம் அல்லது வேளாண்மை உழவர் நலத்துறை வாயிலாக நடைபெறும் முகாம்களில் பங்கேற்று பதிவு செய்து கொள்ள வேண்டும் நவம்பர் 15ஆம் தேதி இப்பதிவுக்கான கடைசி நாள் என திரு.செல்வம் வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி கூறியுள்ளார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 'நான் முதல்வன் வெற்றி நிச்சியம்' திட்ட தொழில்முனைவோருக்கான பயிற்சி



கடலூர், நவ.11

கடலூர் மாவட்டம், விருத்தா சலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக, காளாண் வளர்ப்பில் வெளிவளாக பயிற்சி நடைப்பெற்றது. 'நான் முதல்வன் – வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் காளான் பண்ணை சிறுதொழில் முனைவோருக்கான வெளி வளாகப் பயிற்சி 11.11.25 அன்று அளிக்கப்பட்டு திட்ட ஒருங்கிணைப்பாளர் சார்பாக முனைவர் ஜெ.ஜெயக்குமார் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் கலந்து கொண்டு பயனாளி மெர்லின் மற்றும் ஆரோக்கியமேரி புதிதாக வடிவமைத்துள்ள காளாண் வளர்ப்பு குடில், மண் புழு கூடம், கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு கொட்டகையினை பார்வையிட்டுவேளாண் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினர். பண்ணைகழிவுகள் கொண்டு மண் புழு உரம் தயாரிப்பதற்கு சில்பாலின் பைகள் கொடுக்கப்பட்டது. தாய் வித்து காளாண் தயரிக்குமாறும், அசோலா, கோ.பி.என் 5, தீவனப்புல் பற்றிய முக்கியத்துவமும், ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு அமைக்கும் முறையை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர்கள் சு.கண்ணன், கு.காயத்ரி, க.கலைச்செல்வி ஆகியோர் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்களான மீனலட்சுமி, சாமூண்டீஸ்வரன், பவானி, விஷ்ணுப்பிரியா ஆகியோர் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சியில் பண்ணை மகளிர்கள் 35க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# திருந்திய நெல் சாகுபடி விவசாயிக்கு ரூ.5 லட்சம் பரிசு

## மாநில விருதுக்கு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

சேலம், நவ.11

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் சம்பா நெற்பயிரில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு, தமிழக அரசு சார்பில் 'திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான' மாநில அளவிலான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்புமிக்க விருதுக்குப் போட்டியிடத் தகுதியுள்ள விவசாயிகள் விண்ணப் பிக்கலாம் என வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விருது, விவசாயிகளிடையே திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தைப் (SRI) பிரபலப்படுத்துவதையும், அதிக மகசூல் அடைந்தவர்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

**தகுதிக்கான நிபந்தனைகள்**

தற்போது 2024-25 ஆம் ஆண்டுக்கான பயிர் விளைச்சல் போட்டிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும்.
- தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இத்தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்த முன்னோடி விவசாயியாக இருத்தல் வேண்டும்.
- நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இருவரும் விண்ணப்பிக்கலாம்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் இரகங்களை மட்டுமே பயிர் செய்திட வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள், பதிவுக் கட்டணமாக ரூ.150/– செலுத்திப் பதிவு செய்ய வேண்டும். தகுதியுள்ள விவசாயிகள் தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கலாம்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று மாநில அரசின் விருதை வெல்லுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் கவிதாஅழைப்பு விடுத்துள்ளார்.



# நான்கு நாட்கள் மட்டுமே! சம்பா நெற்பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய!!

புதுக்கோட்டை, நவ.11

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா நெற்பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய கடைசி தேதி 15.11.25 வரை காத்திராமல் உடனடியாக பயிர் காப்பீடு செய்ய புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு 2025-26ஆம் ஆண்டிற்கு சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.36,000/-கடன் தொகையில், விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை 1.5 சதவீதம் மட்டுமே, அதன்படி ஏக்கருக்கு ரூ.540/- காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்தினால் போதுமானது.

இந்த திட்டத்தில் பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் கடன் பெறும் வங்கிகளில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

நடப்பு சம்பா பருவத்தில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் நவம்பர் மாதம் 15ஆம் தேதி (15.11.25) ஆகும். எனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் பயி ர்காப்பீடு பதிவு செய்து இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிலிருந்து தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆண்டு முதல் தேசிய பயிர் காப்பீடு வலைதளத்தில் நேரடியாக பதிவு மேற்கொள்வதால் பதிவு செய்யக்கூடிய பயனாளியின் அலைபேசி எண்ணுக்கு வரும் (OTP-One Time Password) ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளீடுசெய்யப்பட்ட பின்பு தான் பதிவு உறுதி செய்யப்படுகிறது. ஆகையால் பயிர் காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு தேதி 15.11.25 வரை காத்திராமல் உடனடியாக பதிவு மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு படிவம், பதிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் 1435ஆம் பசலிக்கான நெல் சம்பா சாகுபடி அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியத் தொகையினை தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது வணிக வங்கிகளிலோ அல்லது பொது சேவை மையங்களிலோ காப்பீடு செய்து அதற்குரிய இரசீதை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்ப்பதற்கும், தங்களுடைய விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பதிவு செய்த விபரங்களை சரிபார்ப்பதற்கும், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில், காப்பீட்டு பிரிமீயத் தொகையை செலுத்தி தங்களது நெற்பயிரை முன் கூட்டியே பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் விவரங்களுக்கு மாவட்டவேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தினையோ அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தினையோ தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்று புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா

சென்னை, நவ.11

இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா மூலம் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெரும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இப்கோ நானோ உரங்கள் (நானோ யூரியா, நானோ டிஏபி) மற்றும் இப்கோ யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்களுடன் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறலாம்.ஒரு பாட்டில் நானோ உரம் வாங்கினால் ரூ.10000 காப்பீடு. அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை காப்பீடு பெறலாம் (ஒரு வருடத்திற்கு 20 பாட்டில் நானோ உரம் வரை காப்பீடு பெறலாம்).



# ராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

ராணிப்பேட்டை, நவ.11

பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15 2025 கடைசி நாள்.

எனவே இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயனடைய வழிவகை செய்யும் வகையில் வேளாண்மை இணை இயக்குனர் செல்வ ராஜ், அனைத்து கிராமங்களுக்கும் இத்தகவல்களை தெரிவிக்க வேண்டும் என்று வாகன விழிப்புணர்வு விளம்பரம் செய்து விவசாயிகளுக்கு தெரிவித்து பயனடைய வேண்டும் என்று விழிப்புணர்வு வாகனத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இதில் நெல் பயிருக்கு பிரீமியம் தொகையாக ஏக்கருக்கு ரூபாய் 545 செலுத்தி விவசாயிகள் பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.




விவசாயிகள் அருகில் உள்ள பொது சேவை மையம், கூட்டுறவு சங்கம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்' தனியார் வங்கிகள் மற்றும் இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் பதிவு செய்து கொள்ளலாம். இதில் ஆற்காடு வேளாண்மை உதவி இயக்குனர் சூரியநாராயணன், வேளாண்மை அலுவலர் ஆனந்தன், துணை வேளாண்மை அலுவலர் கண்ணன், தோட்டக்கலை உதவி இயக்குனர் மற்றும் எச்டிஎப்சி லிமிடெட் மாவட்ட மேலாளர் வீர செம்மலர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் விவேகானந்தன் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உலகின் மிக விலை உயர்ந்த அரிசி எது? தெரியுமா?



உலகிலேயே அதிகமாக அரிசி உணவை பயன் படுத்தும் நாடுகளில் தெற்காசியா தான். இங்குள்ள ஒவ்வொரு நாடும் தனித்துவமான அரிசி வகைகளை உற்பத்தி செய்கின்றன. இவை பெரும்பாலும் எல்லோராலும் வாங்க கூடிய விலையிலே கிடைக்கின்றன. ஆனால் உலகிலேயே அதிக விலை கொடுத்து வாங்க கூடிய அரிசி ஜப்பானில் உள்ளது. அதன் பெயர் தெரியுமா?

**கின்மேமை பிரிமியம் அரிசி தான். (KINMEMAI PREMIUM RICE)**

**இதனுடைய விலை என்ன தெரியுமா?**

ஒரு கிலோ வெறும் 12,500 மட்டுமே.

**என்ன ஆச்சரியமாக இருக்கா?**

ஏன் இந்த விலை உயர்வு. இதனுடைய சிறப்பு தன்மை என்ன?

டோயோ ரைஸ் (TOYOA RICE) என்ற கார்ப்ரேசன் நிறுவனம் அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த அரிசி உற்பத்தி செய்கிறது. இந்த அரிசி 6 மாதங்களாக பதப் படுத்தப்பட்டு சுவை காட்டப்படுகிறது. கடந்த 2016யில் மிக விலை உயர்ந்த அரிசியாக கின்னஸ் உலக சாதனையில் இடம் பிடித்துள்ளது குறிப்பிட்ட தக்கது.

**கின்மேமை பிரிமியம் அரிசி எங்கு விளைவிக்கிறது?**

இந்த அரிசி ஜப்பானின் கோஷி ஹி காரி மலைப்பகுதியில் உள்ள 5 பிராந்தியங்களில் விளைகிறது. அவை குன்மா (GUNMA), கிஃபு (GIFU), குமாமோட்டோ (KUMAMOTA), நாகானோ (NAGANA) மற்றும் நிகாட்டா (NIIGATA).

சாதாரண அரிசியுடன் ஒப்படும் போது 1.8 மடங்கு அதிக நார்சத்தும் மற்றும் 7 மடங்கு அதிகமான வைட்டமின் B 1 சத்தும் கொண்டு உள்ளது. இந்த அரிசி SUPER PREMIUM HEALTH RICE என்றும் உடல் நலனில் அக்கறை கொண்டவர் களுக்கு LUXURY HEALTH FOOD-யாக மாறிவிட்டது. இதை அரிசிகளின் 'ரோல்ஸ் ராய்ஸ்' என அழைக்கப்படுகின்றன. TOYOA RICE CORPORATION) சர்வதேச காப்புரிமை ( PATENT RIGHTS) பெற்றுள்ளது.

**மற்ற அரிசிக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

வழக்கமாக பயன்படுத்தப்படும் அரிசியை சமைப்பதற்கு முன் அதை இரண்டு முறை நன்றாக கழுவி சற்று நேரம் ஊற வைக்க வேண்டும். அதிகப்படியான ஸ்டார்ச் மற்றும் அழுக்குகள் நீக்க வேண்டும். ஆனால் இந்த அரிசியில் (கின்மேமை பிரிமியம்) நவீன நெல் அரவையில் முன்கூட்டிய கழுவப்படுகிறது. ஸ்டார்ச் மற்றும் தவிடு அகற்றப்படுகிறது. இதனால் இந்த அரிசியை சமைப்பதற்கு முன்கூட்டிய கழவ வேண்டியதில்லை.

மேலும் இந்த அரிசியில் இணையற்ற ஊட்டச் சத்துகள் கொண்டுள்ளது, வழக்கமான அரிசியை விட 6 மடங்கு ( ஸிஇணறீ கொண்டுள்ளது. இது நோய் எதிர்ப்பு திறன் சக்தியை உருவாக்கும்.

**கின்மேமை அரிசியின் விலை எவ்வளவு தெரியுமா?**

இந்த அரிசியின் பிரிமியம் பாக்கெட் (840 கிராம்) விலை 10, 548யாகவும், இதன்படி ஒரு கிலோ 12, 557யாகும்.

இதுவே உலகின் மிக விலை உயர்ந்த அரிசியாக உள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பயிற்சி



திண்டுக்கல், நவ.11

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை துறையின் மூலம் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு நீலமலைகோட்டை கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி ரெட்யசத்திரம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி, ஆலோசனை படி காந்தி கிராம வேளாண் பல்கலைக்கழக முதுநிலை ஆராய்ச்சியாளர் முத்துராம், ஒருங்கிணைந்த பண்ணையம், மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற வறட்சியை தாங்கக்கூடிய பயிர் ரகங்கள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் முக்கியத்துவம், நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயி களுக்கு விளக்கி கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் மூர்த்தி e-Nam மதிப்பு கூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் திட்டங்கள் பற்றி கூறினார்.

ரெட்டியார்சத்திரம் வட்டாரம் உதவி வேளாண்மை அலுவலர் முத்துசாமி பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தினார். இப்பயிற்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சுவாமிநாதன் கலந்து கொண்டார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# சம்பா நெல் பயிரில் நோய் தாக்குதல் கட்டுப்பாடு

அரியலூர், நவ.11

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) சே.தமிழ்மணி, வெளியிட்ட அறிக்கையில், தா.பழூர் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 5000 எக்டர் பரப்பளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நிலவி வரும் தட்பவெட்ப நிலையின் காரணமாக நெல் பயிரில் பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.



### பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் அறிகுறிகள்

இலையின் மீது நீரில் நனைத்தது போன்று மஞ்சள்நிற வரிகளுடன் காணப்படும். அல்லது இலைநுனிகள் அலை வடிவ ஓரத்துடன் மாறும். இலைகளில் வளைந்து நெளிந்த அலை போன்ற மஞ்சள் கலந்த வெண்மை அல்லது தங்கநிற மஞ்சள் நிறத்தில் காய்ந்த ஓரத்துடன் காணப்படும். நுனியிலிந்து இலைகள் காய்ந்தும் பின் சுருண்டும், இலை நடுநரம்பு பழுதடையாமலும் காணப்படும். அதிகாலை நேரங்களில் இளம் புள்ளிகளின் மேல் பால் போன்ற அல்லது பனித்துளிபோல் திரவம் வடிதல் காணப்படும். தீவிர தாக்குதல் ஏற்பட்ட இலைகள் விரைவில் காய்ந்துவிடும். இதனால் 60% வரை தானிய மகசூல் இழப்பு ஏற்படும்.

### நோய் வளர்ச்சிக்கு சாதகமான காரணிகள்

சூடான வெப்பநிலை (25-30 செ), மழை, அதிக ஈரப்பதம். நெற்பயிரிலும் மற்றும் பாசன வாய்க்காலிலும் நுண்ணுயிர் தாக்கம், காற்று கலந்த மழை, அதிகமாக உரமளித்தல் ஆகியவை ஒரு பயிரிலிருந்து மற்றொரு பயிருக்கு நுண்ணுயிரி களை பரப்புகிறது.

### கட்டுபடுத்தும் முறைகள்

சரியான விகிதத்தில் உரமிடுதல், மிகுதியான தழைச்சத்து அளிப்பதை தவிர்த்தல். நோய் தாக்கப்பட்ட வயலிலிருந்து நீர் மற்ற வயல்களுக்கு செல்வதை தவிர்க்கவேண்டும். களைகள் மற்றும் மாற்று பயிர்களை அழித்தல், முறையான பயிர் இடை வெளியை பாதுகாக்க வேண்டும். 20 கிராம் பசுமையான மாட்டு சாணத்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்து, அதனை படியவிட்டு பின் நன்கு வடிகட்டிய சாற்றை பயன்படுத்த வேண்டும். நோய் முதல் அறிகுறி தோன்றியவுடனும் மற்றும் இரண்டு வார இடை வெளிவிட்டு தெளிக்க வேண்டும். இரசாயன முறையில் ஸ்ட்ரெப் டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் கலவை 300 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1.25 கிலோ/எக்டர் ஆகியவற்றை கலந்து தெளிக்கவேண்டும். பின் தேவை ஏற்பட்டால், 15 நாட் களுக்குப் பின் ஒரு முறை இக்கலவையைத் தெளிக்கலாம். தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) தமிழ் மணி வயல் ஆய்வு செய்து மேற்கண்ட கட்டுப்பாட்டு முறைகளை கையாண்டு நெல் பயிரினை பாதுகாத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நெற்பயிரில் துங்குரோ வைரஸ், பாக்டீரியா இலை கருகல் நோய், புகையான், இலை சுருட்டுப்புழு மற்றும் பாசிப்படலம் நோய் பாதிப்பு



மதுரை, நவ.11

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரத்திற்கு உட்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்ட நெற் பயிர்களில் இலை சுருட்டுப்புழு, புகையான் மற்றும் பாசிப்படலம் தாக்குதல் தென்படுகிறது. இது குறித்து மதுரை, வேளாண்மைக் கல்லூரி பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் மு.சுரேஷ் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் மதுரை மேற்கு, வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன் மற்றும் மதுரை கிழக்கு வேளாண்மை அலுவலர் சே.ஆமினம்மாள் ஆகியோர் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

துங்குரோ வைரஸ் இலைகளின் ஓரங்கள் நுனியிலிருந்து நெளிந்து வளர்ச்சிக்குன்றி மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பிப்ரோபேசின் (25% SC) 320 கிராம் – நடவு செய்து 15 மற்றும் 30 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளித்தல் வேண்டும்.

பாக்டீரியா இலைக்கருகல் நோயானது நெற்பயிரின் இலையானது நுனி வரை மஞ்சள் நிறத்தில் காணப்படும். இலைகளில் சாறு உறிஞ்சப்படுவதால் பயிர் வளர்ச்சி குன்றியும், காய்ந்தும் காணப்படும். இலையுறைகளிள் திட்டு திட்டாக கருகி காய்ந்து காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் 120 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் – 150 நாட்கள் இடைவெளியில் தெளித்தல் வேண்டும்.

புகையான் நோய் தாக்குதலானது நீர் மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். பயிர்களை கையினால் தட்டினால் பூச்சிகள் தண்ணீரில் விழும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து தீய்ந்த மாதிரி காட்சியளிக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை பயன்படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும். தேவைக்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும். விளக்குப் பொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம் அல்லது புப்ரோபெசின் 25% SC 800 மி.லி/ஹெக்டேர், கார்போசல்பான் 25 EC 800 - 1000 மி.லி/ஹெக்டேர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

இலைச் சுருட்டுப்புழுவானது இலைகள் நீள் வாக்கில் மடிக்கப் பட்டிருக்கும். புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பாசலோன் 35 EC 1500-மி.லி/ஹெக்டேர் அல்லது அசாடிராக்டின் 0.03% 10000 மி.லி/ஹெக்டேர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

ஆல்கல் நோய் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் ஆல்கல் பாசிப்படலம் மண்ணில் மிகுந்து காணப்பட்டது. இதனால் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றியும், காய்ந்தும் காணப்பட்டது. இவ்வகை பாசிப்படலம் மண்ணில் படர்வதால் வேர்கள் தேவையான சத்துக்களை எடுத்துக் கொள்ள முடியாமல் வளர்ச்சி தடைபடுகிறது.

இவ்வகையான நோய்கள் பாசிப்படலம் படிந்த வயல்களில் மிகுதியாக இருப்பதால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அதிக தூர் கட்டும் பருவத்தில் காப்பர் சல்பேட் ஏக்கருக்கு 1 கிலோ என்றளவில் 1 கிலோ மணலில் கலந்து நெல் வயலில் விசிறிவிட வேண்டும். வயல், வரப்புகளை களைகள் இல்லாமல் பராமரிக்க வேண்டும் எனவும் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டது.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நெல் சாகுபடியில் இலைச்சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, நவ.11

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் தட்பவெப்பநிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் ஆங்காங்கே தென்படுவதால், இதனை விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, ஆலோசனை தெரிவித்துள்ளார்.



## தண்டு துளைப்பான்

குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம் பயிரில் நடுக்குருத்து வாடிக் காய்ந்து விடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்படின் நெல்மணிகள் பால் பிடிக்காமல், வெண்கதிர்களாக மாறி மகசூல் பாதிப்படைகிறது. இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்திட நாற்றுகளை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து தேவையான தழைச்சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இடுதல் வேண்டும். முதிர்ந்த நாற்றுகளை நடும்போது நுனியைக் கிள்ளிவிட்டு நடுவதனால் குருத்துப் பூச்சியின் முட்டைக் குவியல்களை அழித்துவிடலாம். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணிமுதல் இரவு 10.00 மணிவரை ஒளிரவிட்டுக் குருத்துப் பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம்.

மேலும் அதிக அளவில் குருத்துப்பூச்சியின் தாக்குதல் இருந்தால், ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50 சதவீதம் எஸ்.பி 400 கிராம் அல்லது குளோரான்டிரானிலிபுரோல் 24 எஸ்.சி 40 மி.லி., புளுபென்டையமைடு 20 சதவீதம் டபுள்யூ ஜி 50 கிராம் இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## இலைச்சுருட்டுப்புழு

இலைச்சுருட்டுப் புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்துக் கொண்டு அவற்றிலுள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாக காணப்படும்.

இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகமாக பயன்படுத்திய பகுதி களிலும் மிகுந்து காணப்படும். எனவே வயல் வரப்புகளை சுத்த மாக வைத்துக் கொள்வதன் மூலமாகவும் பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்திற்கு அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறை பிரித்து இடுவதன் மூலமாகவும் இதன் தாக்குதலை கட்டுப்படுத்த லாம். மேலும் பறவை இருக்கைகளை வைத்து பறவைகளை கவர்ந்து புழுக்களை அழிக்கலாம்.

நெல் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு புளுபெண்டியமைடு 20 டபுள்யூ ஜி என்ற மருந்து 50 கிராம் (அல்லது) புளுபெண்டியமைடு டபுள்யூ/டபுள்யூ எஸ்.சி என்ற மருந்து 20 மிலி (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரடு 50 எஸ்.பி என்ற மருந்து 400 கிராம் (அல்லது) குளோரான்ட்ரனிலிப்ரோல் 18.5 எஸ்.சி என்ற மருந்து 60 மிலி இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்த லாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டிக்கு விண்ணப்பிக்க வரவேற்கபடுகின்றன

சேலம், நவ.11

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா விடுத்துள்ள செய்தி குறிப்பில், கெங்கவல்லி வட்டார விவசாயிகள் இந்த சம்பா பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி புதிய உத்தியை கடைப்பிடித்து நெல் சாகுபடி செய்துள்ள கெங்கவல்லி வட்டார விவசாயிகள் தமிழ்நாடு அரசு நாரயண சாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கானுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது, மாநில அளவில் முதல் பரிசு பெறுவோர் ரூ.ஐந்து லட்சம் பரிசும் ரூ.7000/- மதிப்புள்ள பதக்கம் வழங்கபட உள்ளது. இந்த பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் திருந்திய நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நெல் சாகுபடி செய்து முன்னோடி விவசாயியாக இருத்தல் வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ள அரசால் அங்கிகரிக்கப்பட்ட நெல் ரகங்களை பயிரிட வேண்டும். இதற்கு பதிவு கட்டணம் ரூ.150/- செலுத்த வேண்டும் என்று செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பு - ஒரு பார்வை

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகள், இறால் வளர்ப்பிற்கு ஏற்ற சிறந்த சூழலை வழங்குகின்றன. இறால் வளர்ப்பு தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி மற்றும் வருமானம் தரும் துறையாக வளர்ந்து வருகிறது. இது மீன்வளத் துறையின் ஒரு துணைத் துறையாக இருந்தாலும், தனித்துவமான தொழில்முறை வளர்ச்சியை அடைந்துள்ளது.

## இறால் வளர்ப்பின் வரலாறு

தமிழ்நாட்டில் பாரம்பரியமாக கடற்கரையோர மக்கள் “சாதாரண இறால் பிடிப்பு” தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், 1980-களுக்குப் பின் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் செயல்முறை அக்வாகல்ச்சர் நடைமுறைக்கு வந்தது. 1990-களில் அரசு கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மூலம் இறால் வளர்ப்பை ஊக்குவித்தது. Litopenaeus vannamei (வான்நாமி இறால்) என்ற இனத்தை 2009ல் தமிழ்நாட்டில் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியபின் உற்பத்தி அளவு பல மடங்கு உயர்ந்தது.

## தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பு நிலைமை

தமிழ்நாட்டின் கடற்கரை நீளம் சுமார் 1,076 கிமீ ஆகும். இறால் வளர்ப்பு அதிகமாக நடைபெறும் மாவட்டங்கள்:

- நாகப்பட்டினம்
- கடலூர்
- திருவள்ளூர்
- ராமநாதபுரம்
- தூத்துக்குடி
- திருநெல்வேலி



மொத்தமாக 45,000 ஹெக்டேருக்கு மேல் பரப்பளவில் இறால் வளர்ப்பு நடைமுறையில் உள்ளது. வருடாந்திர உற்பத்தி சுமார் 2.5 லட்சம் டன் ஆகும்.

**இறால் வளர்ப்பில் பயன்படுத்தப்படும் இனங்கள்**

Penaeus monodon (Tiger shrimp) - பெரிய அளவில் வளரக் கூடிய இனமாகும்.

Litopenaeus vannamei (Whiteleg shrimp) - அதிக உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மதிப்புள்ள இனமாகும்.

Macrobrachium rosenbergii (Freshwater prawn) - உள்நாட்டு நீரில் வளர்க்கப்படும் வகை.



**இறால் வளர்ப்பு முறைகள்**

**1. பாரம்பரிய முறை**

● கடலோர குளங்கள் மற்றும் இயற்கை நீர்நிலைகளில் குறைந்த அளவிலான வளர்ப்பு.

**2. அரை – தீவிர முறை (Semi-intensive)**

● குளங்கள் கட்டுப்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை, உணவு வழங்கல், மற்றும் துப்புரவு முறையுடன்.

**3. தீவிர முறை (Intensive culture)**

● உயர் அடர்த்தி, தொழில்நுட்ப சாதனங்கள் (aerator, feeder systems) மூலம் அதிக உற்பத்தி.

**பொருளாதார தாக்கம்**

● இறால் வளர்ப்பு தமிழ்நாட்டில் மிகப்பெரிய வெளிநாட்டு நாணய வருமானம் தரும் துறையாகும்.

● இந்தியாவில் இருந்து இறால் ஏற்றுமதியில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றுகிறது.

● **ஏற்றுமதி நாடுகள் :** அமெரிக்கா, ஜப்பான், சீனா, வியட்நாம், ஐரோப்பா.

● சிறு மற்றும் நடுத்தர நிலக்காரர்கள் தொழில் முனைவோராக மாறியுள்ளனர்.

● பெண்கள் இறால் பேக்கிங், செயலாக்கம், மற்றும் விற்பனை துறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

● **சாதாரண வருமானம் :** ஒரு ஹெக்டேருக்கு 3–5 டன் உற்பத்தி மூலம் ஆண்டிற்கு ரூ.8–10 லட்சம் வரை நிகர லாபம் கிடைக்கிறது.

**இறால் வளர்ப்பின் சமூக தாக்கம்**

- கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அதிகரிப்பு.
- குடும்ப வருமானம் மற்றும் வாழ்வாதார நிலை உயர்வு.
- தொழில் முனைவுத் திறன் வளர்ச்சி.
- கல்வி மற்றும் சுகாதார வசதிகள் மேம்பாடு.



**சவால்கள் மற்றும் பிரச்சினைகள்**



● **நோய்கள் :** வெண்புள்ளி நோய் போன்ற வைரஸ் நோய்கள் உற்பத்தியை குறைக்கின்றன.

● **நிலப்பயன்பாடு :** கடற்கரை நிலங்கள் மீன்/இறால் குளங்களாக மாற்றப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது.

● **சந்தை நிலைமாற்றம் :** உலக சந்தை விலை மாற்றம் உற்பத்தியாளர்களுக்கு சிரமம் தருகிறது.

**தீர்வுகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்**

● நீர் சுத்திகரிப்பு மையங்கள் அமைத்தல்.

● உயிரியல் கட்டுப்பாடு.

● இனப்பெருக்க நிலையங்கள் மேம்படுத்தல்.

● அரசு நிதி உதவி மற்றும் பயிற்சி முகாம்கள்.

● உள்நாட்டு சந்தையில் இறால் உணவுப் பொருட்களுக்கு அதிக தேவை.

● ஆரோக்கிய உணவாக இறால் மீது நம்பிக்கை அதிகரித்து உள்ளது.

● பசுமை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சீரான வளர்ச்சி.

● ஏற்றுமதி வாய்ப்புகள் விரிவடைவது.





இறால் வளர்ப்பு தமிழ்நாட்டில் உணவுத் துறை, பொருளாதாரம், மற்றும் வேலைவாய்ப்பில் பெரும் பங்கு வகிக்கிறது. நவீன தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் இணைந்து செயல்பட்டால், இது கிராமப்புற வளர்ச்சிக்கும், மாநில பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கிய தளமாக இருக்கும். இறால் வளர்ப்பு துறை தமிழ்நாட்டின் "புதுமை நிறைந்த நீர்வளப் புரட்சியின்" அடையாளமாக திகழ்கிறது.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333